**சார்பு நீதிமன்றம், ஊத்தங்கரை**

**முன்னிலை:– திரு. பா. திருஞானசம்பந்தம், பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, ஊத்தங்கரை.**

**2026–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 25–ம் நாள் புதன்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2057 விசுவாவசு வருடம் மாசி 13–ம் நாள்**

**இடை நிலை மனு எண்.08/2025**

**இன்**

**அசல் வழக்கு எண்.202/2017**

1. முத்தம்மாள்
2. ஆனந்தி
3. பழனி
4. அண்ணாதுரை (பொது அதிகார முகவர்)

.... மனுதாரர்கள் / வாதிகள்

**//எதிர்//**

1. பழனி கவுண்டர் (இறப்பு)
2. சிவகாமி ... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

3. பழனியம்மாள்
4. விஸ்வநாதன்
5. ஏழுமலை
6. உமா
7. சந்திரகேசன்
8. அசோக்குமார்
9. மலர்விழி

... உத்தேச பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. T.N. பாஸ்கர், அவர்கள் ஆஜராகியும், 1–ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K. முருகன், அவர்கள் ஆஜராகியும், 5 முதல் 8 எதிர்மனுதாரர்களை இந்நீதிமன்றத்தில் அழைத்து ஆஜரின்மையால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டும், இரு தரப்பு வாத உரைகளை

கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்து, இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலணையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

<u>**உத்தரவு**</u>

உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6, விதி 17 மற்றும் பிரிவு 151 –ன் படி இம்மனு தாக்கல்.

<u>**2. மனுதாரரின் மனுவின் சுருக்கம் :–**</u>

மேற்படி வழக்கினை பிரதிவாதிகளுக்கு எதிராக உரிமை விளம்புகை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காகவும் தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கு நிலுவையில் இருந்து வரும் நிலையில் வழக்கின் 1–ம் பிரதிவாதியான பழனி கவுண்டர் என்பவர் கடந்த 25.01.2024–ம் தேதியில் இறந்துவிட்டார். இறந்த 1–ம் பிரதிவாதிக்கு அவரது மனைவி பழனியம்மாள், 2–ம் பிரதிவாதி சிவகாமி மற்றும் மகன் வைஸ்ராயர், மாணிக்கம் மற்றும் மகள் மாதம்மாள் ஆகியோர் வாரிசுகள் ஆவார்கள். இதில் 2–ம் பிரதிவாதி சிவகாமி ஏற்கனவே வழக்கில் தரப்பினராக இருந்து வருகிறார். 1–ம் பிரதிவாதியின் மற்றொரு மகனான மாணிக்கம் என்பவரும் அவரது மனைவி லட்சுமி என்பவரும் வாரிசுகள் யாருமின்றி இறந்து விட்டார்கள். 1–ம் பிரதிவாதியின் மகளான மாதம்மாள் என்பவர் சந்திரகேசன், அசோக்குமார், மலர்விழி ஆகியோரை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். தற்போது 1–ம் பிரதிவாதியின் மனைவி மனைவி பழனியம்மாள் மற்றும் விஸ்வநாதன், ஏழுமலை, உமா, சந்திரகேசன், அசோக்குமார், மலர்விழி ஆகியோர்களை 1–ம் பிரதிவாதியின் வாரிசுகளாக வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க வேண்டி மனுதாக்கல் செய்து மனுவானது கடந்த 26.09.2025–ம் தேதியில் இடைமனு எண். 07/2025 என எண்ணிடப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி தாவா பிராதினை திருத்தப்பாடு செய்ய வேண்டியது அவசியமாகிறது. எனவே திருத்தப்பாடு விவரத்தில் கண்டுள்ளவாறு தாவா பிராதினை திருத்தப்பாடு செய்ய அனுமதி வழங்க வேண்டுமென்று இம்மனு தாக்கல்.

**3. 2–ம் எதிர்மனுதாரரின் எதிர் உரையின் சுருக்கம்.**

எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் / பிரதிவாதி தாக்கல் செய்துள்ள இந்த மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல என்றும், இந்த எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர். மனுதாரர்கள் பிரமாண பத்திரத்தில் பழனிகவுண்டர் என்பவர் கடந்த 25.01.2024–ம் தேதியில் இறந்து விட்டார் என்றும், இறந்து விட்ட பழனிகவுண்டர் என்பவருக்கு அவரது மனைவி மற்றும் மகன்கள், மகள்கள் மற்றும் உத்தேச பிரதிவாதிகள் மட்டுமே வாரிசுதாரர்கள் என கூறி மனு தாக்கல் செய்துள்ளனர். இற்நதுவிட்ட பழனி கவுண்டர் என்பவரின் வாரிசுதார்கள் குறித்து எந்தவித அவணங்களையும் தாக்கல் செய்யாமல் மனுதாக்கல் செய்துள்ளதால் மனுதாரர்கள் மனு நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர்கள் இந்த மனுவினை காலம் கடந்து தாக்கல் செய்துள்ளதாலும் மனுதாரர்களின் மனு தள்ளுபடி செய்ய வேண்டிய ஒன்றாகும். மனுதாரர்களின் மனுவில் எவ்வித உண்மையும் இல்லை. எனவே மனுதாரர்களின் மனுவினை எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடனும், நஷ்ட ஈட்டு தொகையுடனும் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டிய ஒன்றாகும்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிலைப்படுத்தவில்லை.

**5.தீர்வுக்கான பிரச்சனை :–**

1. மனுதாரர் மனு அனுமதிக்க கூடியதா? என்பதே ஆகும்.

**6.தீர்வு:–**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் வழக்கு நிலுவையில் இருந்து வரும் நிலையில் வழக்கின் 1–ம் பிரதிவாதியான பழனி கவுண்டர் என்பவர் கடந்த 25.01.2024–ம் தேதியில் இறந்துவிட்டார் என்றும், இறந்த 1–ம் பிரதிவாதிக்கு அவரது மனைவி பழனியம்மாள், 2–ம் பிரதிவாதி சிவகாமி மற்றும் மகன் வைஸ்ராயர், மாணிக்கம் மற்றும் மகள் மாதம்மாள் ஆகியோர் வாரிசுகள்

என்றும், இதில் 2−ம் பிரதிவாதி சிவகாமி ஏற்கனவே வழக்கில் தரப்பினராக இருந்து வருகிறார் என்றும், 1−ம் பிரதிவாதியின் மற்றொரு மகனான மாணிக்கம் என்பவரும் அவரது மனைவி லட்சுமி என்பவரும் வாரிசுகள் யாருமின்றி இறந்து விட்டார்கள் என்றும், 1−ம் பிரதிவாதியின் மகளான மாதம்மாள் என்பவர் சந்திரகேசன், அசோக்குமார், மலர்விழி ஆகியோரை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்றும், தற்போது 1−ம் பிரதிவாதியின் மனைவி மனைவி பழனியம்மாள் மற்றும் விஸ்வநாதன், ஏழுமலை, உமா, சந்திரகேசன், அசோக்குமார், மலர்விழி ஆகியோர்களை 1−ம் பிரதிவாதியின் வாரிசுகளாக வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க வேண்டி மனுதாக்கல் செய்து மனுவானது கடந்த 26.09.2025−ம் தேதியில் இடைமனு எண். 07/2025 என எண்ணிடப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும், அதன்படி தாவா பிராதினை திருத்தப்பாடு செய்ய வேண்டியது அவசியமாகிறது என்றும் எடுத்துரைத்தார். ஆனால் கற்றறிந்த 2−ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் மனுதாரர்கள் பிரமாண பத்திரத்தில் பழனிகவுண்டர் என்பவர் கடந்த 25.01.2024−ம் தேதியில் இறந்து விட்டார் என்றும், இறந்து விட்ட பழனிகவுண்டர் என்பவருக்கு அவரது மனைவி மற்றும் மகன்கள், மகள்கள் மற்றும் உத்தேச பிரதிவாதிகள் மட்டுமே வாரிசுதாரர்கள் என கூறி மனு தாக்கல் செய்துள்ளனர் என்றும், இறந்துவிட்ட பழனி கவுண்டர் என்பவரின் வாரிசுதார்கள் குறித்து எந்தவித அவணங்களையும் தாக்கல் செய்யாமல் மனுதாக்கல் செய்துள்ளதால் மனுதாரர்கள் மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும் எடுத்துரைத்தார்.

இருதரப்பு வாதுரை மற்றும் சாட்சிய, சான்றாவணங்களை பரிசீலித்ததில் மேற்படி அசல் வழக்கினை தொடர்ந்து நடத்தும் பட்சத்தில் மேற்படி வழக்கின திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், இல்லையெனில் மனுதாரருக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பும், அனேக கஷ்ட நஷ்டங்களும் ஏற்பட கூடும் என்றும், ஆகவே இந்நீதிமன்றம் மேற்படி அசல் வழக்கில் மனுவில் திருத்தப்பாடு விவரத்தில் கண்டுள்ளவாறு திருத்தம் செய்ய வேண்டியுள்ளது

அவசியம் என எடுத்துரைத்திருப்பதை கருத்தில் கொண்டும், மேலும் மேற்படி திருத்தம் குறித்து குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்க வழிவகை உள்ளதாலும், மேற்படி திருத்தம் குறித்து கூடுதல் எதிருரை தாக்கல் செய்ய வழிவகை உள்ளதாலும், மனுதாரருக்கு அவரது தரப்பு எடுத்துரைக்க ஒரு வாய்ப்பு வழங்கலாம் இந்நீதிமன்றம் கருதுவதாலும், மேலும் பல வழக்குகள் உருவாவதை தடுப்பதற்காகவும், இம்மனு அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்றும், வழக்கு மூலம் மாறுபடாது என இந்நீதிமன்றம் கருதுவதாலும், இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக இம்மனு அனுமதிக்கப்பட்டு, உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று (25.02.2026) இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

THIRUGNANASAMBANDAM P

Subordinate Judge,
Uthangarai.
Digitally signed by THIRUGNANASAMBANDAM P

சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.

<u>1. மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :</u> **இல்லை .**

<u>2. எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :</u> **இல்லை.**

THIRUGNANASAMBANDAM P

Subordinate Judge,
Uthangarai.
Digitally signed by THIRUGNANASAMBANDAM P

சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.